www.Padasalai.Net www.CBSEtips.in

V10T

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - நவம்பர் 2022

-----

வகுப்பு 10

நேரம்: 1.30 மணி

தமிழ்

மதிப்பெண்கள்: 50

**I. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:** 8×1=8

1) 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே ...............
அ) திருப்பதியும், திருத்தணியும் ஆ) திருத்தணியும், திருப்பதியும்
இ) திருப்பதியும், திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும், பழனியும்

2) 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது ...............
அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

3) இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ...............
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

4) கண்ணதாசனின் இயற்பெயர் ...............
அ) சுப்பையா ஆ) முத்தையா
இ) சுப்புரத்தினம் ஈ) இராசகோபாலன்

5) தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ...............
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

6) 'வெண்பா'வின் ஓசை ...............
அ) அகவல் ஓசை ஆ) செப்பல் ஓசை
இ) துள்ளல் ஓசை ஈ) தூங்கல் ஓசை

7) மேன்மை தரும் அறம் என்பது ...............
அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

8) 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் ...............
அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர்
ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்
ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

**II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக:** 2×2=4

9) குறிப்பு வரைக - 'அவையம்'

10) பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

11) காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக:** 3×2=6

12) புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகள் அட்டவணைப்படுத்துக.

13) **பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க:**
அ) முன்னுக்குப் பின் ஆ) மறக்க நினைக்கிறேன்

14) **பின்வரும் சொல்லைப் பிரித்து பார்த்து பொருள் தருக:**

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



15) கலைச்சொல் தருக:

அ) Patent ஆ) Philosopher

**IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக: 3×3=9**

**(19 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

16) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

17) 'முதல்மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

18) கீழ்க்காணும் திருக்குறளை அலகிட்டு வாய்பாடு கூறுக:

''உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்

கல்லார் அறிவிலா தார்''.

19) அடிபிறழாமல் எழுதுக:

''தூசும் துகிரும் ............'' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

**V. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: 3×5=15**

20) அ) **மொழிபெயர்க்க:**

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

**(அல்லது)**

ஆ) மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் அட்டவணைப்படுத்துக.

21) அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால், இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

22) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:



**VI. விரிவாக விடை எழுதுக: 1×8=8**

23) அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

**(அல்லது)**

ஆ) இராமானுசர் நாடகத்தினை சுருக்கிக் கதையாக எழுதுக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593